# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 50/2019 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | மாதையன் | நாள் | 09.01.2025 |
| தகப்பனார் பெயர் | பொன்னப்பன் | | |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

24) பிரதிவாதியின் நிலத்தில் மேடு, பள்ளங்கள் எதுவும் இல்லாமல், சமமாக உள்ளது என்றால், சரியல்ல. பகுதி மேடாகவும், பகுதி பள்ளமாகவும் உள்ளது. தாவா சொத்தில் பிரதிவாதி அடியாட்களுடன் அத்துமீறி நுழைய முயச்சித்ததாக நான் சொல்லியுள்ள நிலையில், அவ்வாறு அடியாட்கள் யாரும் வரவில்லை என்றால், சரிதான். ஆனால் பிரதிவாதியே நேரடியாக பிரச்சனை செய்தார். பிரதிவாதி ஆக்கிரமிக்க முயற்சித்ததாக நான் சொல்லியுள்ள நிலையில், மேட்டுப்பகுதியிலுள்ள என் நிலத்தை ஆக்கிரமிக்க பிரதிவாதி முயற்சித்ததாக நான் சொல்கிறேனா என்றால், ஆமாம்.

25) எந்த தேதியில், எவ்வளவு நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால், 2019 ம் வருடத்தில் ஆக்கிரமிப்பு செய்தார். தேதி, மாதம் எனக்கு நினைவில்லை. சுமார் 0.04 சென்ட் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார். ச.எண்.37/3A ல் எந்த பகுதியை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்றால், மேற்படி சர்வே எண்ணின் கிழக்கு பகுதியை பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். என் நிலத்திற்கு கிழக்கில் ச.எண்கள்.36, 38 ஆகியவை உள்ளது என்றால், சரிதான்.

26) என்னுடைய நிலத்திற்கு கிழக்கில் யாருடைய நிலம் உள்ளது என்றால், அர்த்தனாரி என்பவரின் நிலம் உள்ளது. எப்போது ஆக்கிரமிப்பு செய்தார் என்றால், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே ஆக்கிரமிப்பு செய்துவிட்டார். அவ்வாறெனில் தற்போது நான் என் தந்தைக்கு கிரய பத்திரப்படி பாத்தியப்பட்டு, என் தந்தையால் என் பெயருக்கு ஏற்படுத்தப்பட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் பேரில் நான் அனுபவத்தில் உள்ளதாக சொல்லும் நிலத்தில் பிரதிவாதியின் ஆக்கிரமிப்பு போக மீதம் 0.96 சென்ட் நிலத்தில்தான் அனுபவத்தில் உள்ளதாக சொல்கிறேனா என்றால், ஆமாம்.

27) இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியை பிரபதிவாதி ஆக்கிரமித்துவிட்டதாக நான் சொல்லும் நிலையில், மேற்படி ஆக்கிரமிப்பு பகுதி குறித்து, விளம்புகை பரிகாரமோ, மேற்படி ஆக்கிரமிப்பு பகுதியை மீட்டுதரகோரி சுவாதீன மீட்பு பரிகாரமோ இவ்வழக்கில் கோரியுள்ளேனா என்றால், அவ்வாறுதான் கோரியுள்ளேன். என் வழக்குரை சொத்து விவரத்தில் மேற்படி ஆக்கிரமிப்பு பகுதியை அதன் அளவுகளுடன் தனியாக காண்பித்துள்ளேனா என்றால், இல்லை.

28) என் முதல் விசாரணை சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும், அவ்வாறு ஆக்கிரமிப்பு குறித்தோ, அதன் அளவுகள் குறித்தோ குறிப்பாக நான் ஏதேனும் சங்கதிகளை சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 பட்டா என் பெயரில் உள்ளது என்றால், சரிதான். மேற்படி பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளின் அடிப்படையில்தான் தாவா சொத்தை அளக்க நீதிமன்ற ஆணையரை நியமிக்ககோரி மனு செய்தேன் என்றால், சரிதான்.

29) மேற்படி மனுவின் பேரில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டு, தாவா சொத்தை பார்வையிட்டு, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் மூலம் சொத்தை அளந்து, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட சமயத்தை என் நிலத்தை நான் உழுதிருந்தேன் என்றால், சரிதான். மேற்படி அறிக்கையில் பட்டாப்படி எனக்குள்ள நிலம் என்னுடைய அனுபவத்தில் உள்ளது எனவும், அதில் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யப்படவில்லை எனவும், கூறப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

30) அதேபோல் நீதிமன்ற ஆணையர் பிரச்சனைக்குரிய சொத்தில் வண்டிப்பாதை எதுவும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார் என்றால், சரியல்ல. வண்டிப்பாதை உள்ளதாக சொல்லியுள்ளார். நான் சொல்வது தவறானது என்றாலும், அவ்வாறு நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில், வண்டிப்பாதை உள்ளதாகவோ, ஆக்கிரமிப்பு உள்ளதாகவோ சொல்லப்படவில்லை என்றாலும், நான் சொல்வது போல் உண்மையில்

அவ்வாறு ஏதேனும் இருந்திருந்தால், அது குறித்து நீதிமன்ற ஆணையர் தன் அறிக்கையில் சொல்லியிருப்பார் என்றாலும், சரியல்ல.

31) அவ்வாறு நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் உண்மையில் அவ்வாறு ஆக்கிரமிப்பு இருந்து, அது குறித்து சொல்லப்படாமல் இருந்திருந்தால் மேற்படி அறிக்கைக்கு எங்கள் தரப்பில் ஆட்சேபனை செய்திருப்போம் என்றாலும், அவ்வாறு எதுவும் இல்லாததால்தான் நான் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. குறிப்பாக மேற்படி ஆக்கிரமிக்கப்பட்டதாக நான் சொல்லும் 0.04 சென்ட் நிலம் குறித்தும், மேற்படி ஆக்கிரமிப்பை நீதிமன்ற ஆணையர் கண்டறிய தவறிவிட்டார் எனவும், மேற்படி அறிக்கைக்கு நான் ஆட்சேபனை செய்திருப்பேன் என்றால், சரியல்ல.

32) என் தந்தைக்கு கிரய படி 1 ஏக்கர் நிலம் பாத்தியம் என்றால், சரிதான். மேற்படி 1 ஏக்கர் நிலத்திற்கு நான்கு புறமும் புறம்போக்கு நிலங்களோ அரசுக்கு சொந்தமான வேறு நிலங்களோ இல்லை என்றால், சரிதான். என் தந்தை 1 ஏக்கர் நிலத்தை கிரயம் பெற்றுள்ள நிலையிலும், மேற்படி நிலத்தை சுற்றி புறம்போக்கு நிலங்கள் எதுவும் இல்லாத நிலையிலும், எதனடிப்படையில் என் தந்தைக்கு 1.02 ஏக்கர் அளவிற்கு பட்டா வழங்கப்பட்டது என்றால், என் தந்தை கிரயம் பெற்றபோது தோராயமாக அளவு சொல்லப்பட்டிருந்தது. கிரயம் பெற்ற பின்பு அளந்து பார்த்தபோது 0.02 சென்ட் கூடுதலாக இருந்ததால் அதற்கும் சேர்த்து பட்டா பெறப்பட்டது.

33) மேற்படி சங்கதிகளை என் வழக்கில் நான் சொல்லவில்லை என்றால், சரியல்ல. என் தந்தை பெயரிலுள்ள கிரய ஆவணத்தை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறானது என்றாலும், என் தந்தை பெயரிலுள்ள கிரய ஆவணம் எதையும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கில் நான் சொல்லியுள்ளதுபோல் பிரதிவாதி என்னுடைய நிலத்தை ஒருபோதும் ஆககிரமிப்பு செய்யவில்லை என்றாலும், பிரதிவாதிக்கு இடையூறு செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் தவறான சங்கதிகளுடன் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

34) நானும், என் பக்கத்து நிலத்துக்காரர்களும் பிரதிவாதிக்கு இடையூறு செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் இல்லாத உரிமைகளை குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. இவ்வழக்கில் தாவா சொத்திற்கு மேற்குபுறம் வழித்தடம் உள்ளதாக குறிப்பாக நான் சொல்லவில்லை என்றால், சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.